மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்
2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17 ம் நாள் வெள்ளிக்கிழமை
இடைநிலை மனு எண்.10/2025
இன்
அசல் வழக்கு எண்.54/2022
-------

1. பரமசிவம்
2. அய்யம்மாள் .. மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. கருப்பசாமி
2. தமிழக அரசுக்காக அதன்
மாவட்ட ஆட்சியர் அவர்கள், விருதுநகர்
3. வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்,
சாத்தூர்.
4. வட்டாட்சியர் அவர்கள்,
சாத்தூர்.
5. வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள்,
சாத்தூர்.
6. கிராம நிர்வாக அலுவலர்,
சின்னக்காமன்பட்டி. .. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவனாது இறுதியாக என் முன்பாக 12.09.2025 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஜி. ஆர். முருகன், அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. E. கருப்பசாமி அவர்கள் ஆஜராகியும், எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு அபிடவிட்டு, எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவானது வா.சா.1–ஐ மீண்டும் திரும்ப அழைத்து விசாரணை செய்ய அனுமதி வழங்க வேண்டி கட்டளை 18 விதி 17 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு மனுவின் சுருக்கம்–</u>**

**2.1.** மனுவில் மனுதாரர்கள். அசல் வழக்கில் வாதிகள். தாவா வழக்கானது தபசில் 3 வது அயிட்ட சொத்து பொதுப்பாதை என விளம்புகை செய்யக்கோரியும், அதன் தொடர்ச்சியாக தபசில் 3 வது அயிட்ட சொத்தை வாதிகள் பொதுப்பாதையாக பயன்படுத்தி வருவதை 1 ம் பிரதிவாதியோ அவரது வகையாட்களோ எந்தவித இன்னலும் இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், மேற்படி 3 வது அயிட்ட சொத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை நீதிமன்றம் குறிப்பிடும் காலத்திற்குள் அகற்றிட பிரதிவாதிகளுக்கு செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.2.** பிராது தபசில் சொத்தான சின்னக்காமன்பட்டி கிராமம் பழைய சர்வே எண்.94/1 அதற்குரிய சர்வே எண்.654/48 சம்மந்தமாக 4 ம் பிரதிவாதி அலுவலகத்திலிருந்து வரும் ஆவணங்களான சர்வே எண்.654/48–க்குரிய புல வரைபடம் மற்றும் கிராம 10(1) அடங்கல் பதிவேடு ஆகியவற்றில் பொதுப்பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ள காரணத்தினாலும், தபசில் 3 வது அயிட்ட சொத்தானது அரசு பாதை என்பதை நிரூபணம் செய்ய வேண்டியிருந்த காரணத்தினாலும் சர்வே எண்.654/48 க்குரிய புலவரைபடம் மற்றும் மேற்படி கிராம 10(1) அடங்கள் பதிவேடு ஆகியவற்றை நீதிமன்ற வசம் ஒப்படைக்குமாறு மனுதாரரது தரப்பில் இ.ம.எண்09/2024 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுவின் பேரில் 2 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி ஆவணங்களும், நீதிமன்றம் வசம் ஒப்படைக்கப்பட்ட காரணத்தினாலும் மேற்படி ஆவணத்தை மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய



ILAKKIYA Digitally signed by ILAKKIYA

வேண்டிய சூழ்நிலை இருந்து வருகிறது. மேற்படி ஆவணங்கள் தாவா வழக்கிற்கு மிக முக்கியமான ஆவணங்களாகும். எனவே வா.சா.1—யை மீண்டும் திரும்ப அழைத்து விசாரணை செய்ய அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. இல்லாது போனால் மனுதாரர்கள் தரப்பிற்கு அநேக கஷ்ட நஷ்டங்கள் ஏற்படக்கூடும். எனவே மனு தாக்கல்..

3. **4 ம்திர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2, 3, 5, 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆட்சேபணை —யின் சுருக்கம்—**

**3.1.** மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. அசல் வழக்கில் மனுதாரர்கள் தாக்கல் செய்த சர்வே எண்.654/48 மற்றும் 10(1) அடங்கல் நகல் ஆகியவற்றை நீதிமன்றத்தில் ஒப்படைக்கக் கோரி இ.ம.எண்.09/2024 மனு தாக்கல் செய்ததன் பேரில் மேற்படி ஆவணங்கள் நீதிமன்றத்தில் சமர்பிக்கப் பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் நீதிமன்ற ஆவணங்கள் என்பகதால் ஷை ஆவணங்களை நீதிமன்ற விசாரணையில் தாமாகவே குறியீடு செய்ய வேண்டியது. அதனால் தாவா மனுவானது வழக்கிற்கு தேவையற்றவையாகும். எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

4. மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா?

5. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. **தீர்வு**

**6.1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் மனுவில் மனுதாரர்கள். அசல் வழக்கில் வாதிகள். மனுதாரர்கள் தரப்பில் வா.சா.1—ஐ மீண்டும் திரும்ப

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

அழைத்து விசாரணை செய்ய அனுமதி வேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவிற்கு மனுதாரர்கள் கூறும் காரணம் என்னவென்றால், தபசில் 3 வது அயிட்டச் சொத்தானது அரசு பாதை என்பதை நிரூபணம் செய்ய வேண்டியிருந்த காரணத்தினாலும், சர்வே எண்.654/48 க்குரிய புல வரைபடம், 10(1) அடங்கள் பதிவேடு ஆகியவற்றை நீதிமன்றம் வசம் ஒப்படைக்குமாறு மனுதாரர்கள் தரப்பில் இ.ம.எண்.09/2024 தாக்கல் செய்யப்பட்டதன் பேரில் மேற்படி ஆவணங்களும் நீதிமன்றம் வசம் ஒப்படைக்கப்பட்ட காரணத்தினாலும், மேற்படி ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்ய வேண்டி சூழ்நிலை இருந்து வருவதால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.2.** எதிர்மனுதாரர்கள் தங்களுடைய ஆட்சேபணையில் மனுதாரர்கள் தாக்கல் செய்த சர்வே எண்.654/48, 10(1) அடங்கல் பதிவேடு ஆகியவைகள் நீதிமன்ற ஆவணங்கள் என்பதால் மேற்படி ஆவணங்களை நீதிமன்றம் விசாரணையில் தாமாகவே குறியீடு செய்ய வேண்டியது. மேற்படி ஆவணங்கள் தாவா வழக்கிற்கு முக்கியமான ஆவணங்கள் என்பதால் மனுதார்கள் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

**6.3.** மேலும் இந்த மனுவிற்கு மனுதாரர்கள் சொல்லும் காரணம் போதுமானதாக இல்லை என்ற போதிலும், வழக்கின் சூழ்நிலை மற்றும் சங்கதிகளை கருத்தில் கொண்டு வா.சா.–1 ஐ மீண்டும் திரும்ப அழைத்து விசாரணை செய்ய அனுமதி வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுவதால் வா.சா.1–ஐ மீண்டும் திரும்ப அழைத்து விசாரணை செய்ய அனுமதி அளித்து உத்தரவிடப்படுகிறது.

**<u>7. இறுதி முடிவு–</u>**

இறுதியாக, இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்துார்.

**சாட்சி, சான்றாவணங்கள்**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்**

இல்லை.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்துார்.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**சாத்தூர்.**
**இ.ம.எண்.10/2025**
**இன்**
**அ.வ.எண்.54/2022**
**உத்தரவு**
**நாள் –17.10.2025.**